19 Feb 193[illegible]

SL
M36.17.10.

ஞானசாகரம்

(அறிவுக்கடல்)

JNANASAGARAM

இது

முப்பத்து மூன்று ஆண்டுகளாக நடைபெறுகின்ற

கனிச் செந்தமிழ் வெளியீடு.

A BI-MONTHLY

திருவள்ளுவர் ஆண்டு ௧௯௬௭ தை,

திருமலர் ௧௪.] [இதழ், ௬௦.

பொருளடக்கம்

முற்கால பிற்காலத் தமிழ்ப்புலவோர் தொடர்ச்சி

(Ancient and Modern Tamil Poets).

இளைஞர்க்கான இன்றமிழ் (தொடர்ச்சி)

(Pure Tamil Reader for the Young, second book).

ஆசிரியர் :

மறைமலையடிகள் என்னும்

ஸ்ரீலஸ்ரீ சுவாமி வேதாசலம் அவர்கள்,

SWAMI VEDACHALAM.

பொதுநிலைக்கழக குரு.

பல்லாவரம்

PALLAVARAM

பொதுநிலைக்கழக நிலையத்தின்கண் உள்ள

திருமுருகன் அச்சுக்கூடத்தில்

T. M. PRESS

பதிப்பிக்கப்பட்டது.

19th February., 1936

ஒரு திருமலர்க் கையொப்பம்] [நான்கு ரூ.

All Rights Reserved.

"அறிவுரைக்கொத்"திற்கு உதவியளித்தார்க்கு நன்றிகூறல்

எமது "அறிவுரைக்கொத்து" என்னும் நூலினைச் சென்னைப் பல்கலைக்கழக உயர் முதல்வகுப்பு மாணவர்க்குப் பாடமாக வைத்ததனைக்கண்டு மனம்பொறா தெழுந்து அதன்மேற் குறைகூறி எழுதியவர்களும் அவை கூட்டிக் கூவியவர்களுமான பார்ப்பனர்களை மறுத்து எழுதியும் அவை கூட்டிப்பேசியும் உதவியளித்த அன்பர்கட்கெல்லாம் எமது நன்றிகூறலை ஆங்கிலத்தில் விரித்தெழுதி அதனை முதலில் "The Ocean of Wisdom" என்னும் எமது ஆங்கில இரு திங்கள் வெளியீட்டிலும், அதன்பின் "Justice" என்னும் ஆங்கில நாள் வெளியீட்டிலும், வெளியிடுவித்தேம். அதனையே பெரும்பாலும் ஓரன்பர் தமிழில் மொழிபெயர்த்துக் கிழமைக்கிருகால் வெளிவரும் "விடுதலை" என்னுந் தமிழ்த் தாளிலும் வெளியிடுவித்தார். ஆதலால், அதனையே திரும்ப யாமுந் தமிழில் முழுதும் மொழிபெயர்த்து வெளியிடுதல் வேண்டாவெனக்கண்டு அதன் சுருக்கத்தைமட்டும் இங்கு வரைகின்றேம்.

எமது "அறிவுரைக்கொத்து" என்னும் நூலினைச் சென்னைப் பல்கலைக்கழக உயர் முதல்வகுப்பு (Intermediate-in-Arts) மாணவர்க்கும், எமது "சாகுந்தல நாடக" மொழிபெயர்ப்பினை உயர் இரண்டாம்வகுப்பு (B A) மாணவர்க்கும் பாடமாகவைத்ததுடன், "அறிவுரைக்கொத்"தினைப் பாடநூல் வைப்பினின்றும் எடுத்துவிடல்வேண்டுமென்று பார்ப்பனர் கரைந்தவழியும் அவர் சொற்களுக்குச் செவிகொடாது அதனைப் பாடநூலாகவே வைத்து உறுதிப்படுத்திய "பாடநூற் கழகத்" தலைவர்க்கும் அதன் உறுப்பினர்க்கும் எமது மனமார்ந்த நன்றியினை முதலிற் றெரிவித்துக்கொள்கின்றேம்.

பல்கலைக்கழகத்தார் தம் மாணவர்க்கு அவர் எடுத்துக்கொள்ளும் மொழியின் இலக்கண இலக்கியங்களையுங் கலைநூல்களையும் மட்டுமே கற்பித்து, அவர் அவற்றில் தேர்ச்சிபெறுமாறு செய்தல் ஒன்றுமேபோதாது. மாணாக்கர்கள் உலக வாழ்க்கையிலுள்ள தமது நிலைமையினையுந், தம்மினத்தவரோடுந், தம்மினத்தவரல்லாத பிறரோடுந் தமக்குள்ள தொடர்பின் நிலைமையினையும் அவர் ஆராய்ந்தறிந்து கொள்ளுமாறு செய்வதூஉம் பல்கலைக்கழகத்தார் செய்தற்குரிய இரண்டாவது கடமையாகும். மாணாக்கர்கள் தம்மனத்துள்ள குற்றங்குறைகளை மட்டுமேயன்றித், தாம் கூடியிருந்து உயிர்வாழும் மக்களின் குற்றங்குறைகளையும் ஆராய்ந்து தெரிந்துகொள்ளுமாறு புரிவதுங் கல்வியறிவினாற் போதரும் பயன்படுபேருதவியாகும். ஒருவன் நல்லவனோ தீயவனோ என்பது, அவன் மற்றவர்களொடு நெருங்கிப் பழகுங்காற்றோன்றும் அவனுடைய செய்கைகளினின்றே புலனாகும். ஓர் ஆடவனும் அவனுடன் கூடியிருக்கும் மக்கட்குழுவுந், தாம் ஒருங்குகூடியிருக்குங் காலம்வரையில் நன்மைக்கோ தீமைக்கோ, ஒருவரது செயல் மற்றவரைப் பற்றாமல் [illegible] அதனால், ஒருவன் தான் கற்ற கல்விவிளக்கைக்கொண்டு தான்மட்டு[illegible] வாழ்க்கைக்குச் செல்லும் நெறியில் ஏகுதல் இயலாது; பிறர்க்கும் அக்கல்வி[illegible]க்கைத் தந்து அவரும் அந் நன்னெறியில் தன்னைப் பின்பற்றி வருமாறு செய்தால்மட்டுமே அஃதவற்குக் கைகூடும்; தான் பெற்ற கல்விவிளக்கைக்கொண்டு அவன் தனது நலத்தையே சென்றுபெறுதற்கு எவ்வளவுதான் வருந்திமுயன்றாலுந், தன்னாற் கருதப்படாமல் அறியாமையிருளில் அழுந்திக்கிடக்குந் தம்மினத்தவர்பாலிருந்து வரும் மருட்காற்றானது அவன் ஏந்திய அவ்விளக்கை அவித்துவிடும். ஆகவே, மாணாக்கர்கள் தமது நிலையினையுந் தம்மொடு தொடர்புடையார் நிலையினையும், அறிந்துகொள்வதொடு தாமும் அவருந் தமது வாழ்க்கைக்கு வேண்டிய எல்லா வகையான துறைகளிலுங்கூட அறிவுடையாதல்வேண்டும். கல்வித்துறையில் நிரம்பிய ஆராய்ச்சிவாய்ந்த ஆங்கில ஆசிரியர்க்கும் (John Stuart Mill & Cardinal Newman) இதுவே கருத்தாகும்.

ஆனால், மக்கள் வாழ்க்கைக்கு வேண்டிய துறைகளில், முதன்மையாய் மக்களின் ஒப்புரவு, ஒழுக்கம், அரசியல் முதலானவைகளைப் பற்றியவைகளில், அவர்களது எதிர்காலவாழ்க்கை மேன்மேல் அறிவுவிளக்கம் வாய்ந்ததாய்

விளங்குமல்லது பிறிதாமோ? இன்னும் இ[illegible]விலை எமது மக்கள் நூறாண்டுயிர்வாழ்தல் எப்படி? [illegible]னும் நூலிற் கண்டுகொள்க. இத்துணைச்சிறந்த ஓர் அரும்பெரு நுட்பத்தைக் கண்டு அதனைத் தமது இளமைக்குத் தலைசிறந்த காரணமாக முதற்கண் எடுத்துரைத்த ஆசிரியர் பிசிராந்தையாரின் கூர்த்த அறிவின்மாட்சி என்றும் நினைவுகூர்ந்து பாராட்டற் பாலதாகும்.

இனித், தாம் ஆண்டில் முதியராயிருந்தே வடிவில் இளைஞராய்த் தோன்றுதற்கான இரண்டாவது காரணத்தைத், தம் ஏவலர்பால் வைத்துரைக்கின்றார் பிசிராந்தையார். நம்புலவர் பெருந்தகைக்கு ஏவலராய் அமைந்தவர்கள் தம் தலைவன் கருத்தறிந்து, அதற்கொத்து நடப்பவர்கள் என்பது 'யான் கருதிய அதனையே கருதுவர் எனக்கு ஏவல்செய்வாரும்' என்று அவர் கூறுமாற்றால் அறியப்படும். தம் தலைவன் கருத்தை அறியாமல் நடப்பவராகவேனும், அறிந்தும் அதற்கேற்ப நடவாதவராகவேனும், அல்லதற்கு மாறாக நடப்பவராகவேனும் ஏவலர் ஒழுகுவராயின், அதனினும் மிக்க துன்பத்தையுங் கவலையையுந் தலைவற்குத் தரவல்லது பிறிதில்லை. ஓர் அரசன் ஒருகால் தன் பக்கத்திருந்த இருவரில் ஒருவனைநோக்கி, "என்மார்பில் உதைத்தான் கால்களுக்கு யாது செய்யலாம்?" எனப் புன்னகை புரிந்துகேட்ப, அவன் பரிந்து "அவனுடைய கால்களை இரண்டாகத் துணித்தெறிதல் வேண்டும்." எனப் பரபரப்புடன் கூறினன். அதன்பின் அம்மன்னன் அங்ஙனமே புன்னகைசெய்து மற்[illegible]வனைப்பார்த்து, "என்மார்பில் உதைத்தான் கால்கட்கு [illegible] செய்யலாம்?" எனவினவ, அவன் "அங்ஙனந் தங்கள் [illegible]ர்பில் உதைத்த குறும்பன் கால்கட்குப் பொற்றண்டையுஞ் சதங்கையும் அணிதல்வேண்டும்." என மொழிந்தனன். பார்மின்! அரசன் மார்பில் ஏறி உதைக்கத் தக்கவன் அவன் ஈன்ற சிறுனையன்றிப் பிறனொருவனுதல் பொருந்தாதே! தன் மகன் தன் மார்பின் மீதேறி விளையாடினதை உட்கொண்டு வினவிய அரசனது கருத்தை முன்னவன் அறியாதுரைப்பப், பின்னவன் அதனை யறிந்துரைத்த நுட்பம் எத்துணை வியக்கற்பாலதாய் மகிழற்பாலதாய் இருக்கின்றது!

இனி, ஒரு சிறந்த விருந்தினர் தமதில்லத்திற்கு வரப்பெற்ற ஒரு தலைவன் தன் சமையலாளை அழைத்து, "இப்பெரியார்க்கு நல்விருந்துசெய்க!" என்று ஏவினன். அதற்கு அவ்வேவலன் மிகமகிழ்ந்து பல்வகைக் கறிகளுங், குழம்பும், அடிசிலும் பிறவும் அமைப்பானுப்புகுந்து, வந்தவிருந்தினர்க்குப் பசியெடுக்கும் வேளை யிதுவாகுமென நினைந்துபாராமற் சமையற்றொழிலிலேயே முனைத்துநின்றான்; பிற்பகல் இரண்டுமணிக்குமேலாகியும் விருந்துண முடிந்தபாடில்லை. இதற்குள் விருந்தினர்க்குப் பசித்துன்பம் மிகுவதாயிற்று. தன்றலைவன் கருத்தும், விருந்தினர் பசிக்குறிப்பும், தன் சமையலாள் மடமையும் முன்னமே அறிந்துவைத்த அவ்வில்லத்தலைவி, மிகச்சிறந்த உணவன்றாயினும் பசிவேளைக்கேற்ற இன்சுவை யுணவாவதனை விரைந்தமைத்துத் தம்மில்லம்வந்த அவ்விருந்தினர்க்குந் தங்கொழுநற்கும் படைத்து அவர்தம் பசித்துன்பத்தைப் போக்கினாள். ஆகவே, ஒருவரது கருத்தறிந்தும் அதற்கேற்ப நடவாமை எத்துணை அருவருக்கற்பாலதா யிருக்கின்றதென்பதூஉம், அதனையறிந்து அதற்கேற்ப நடத்தல் எத்துணை விரும்பற்பாலதாயிருக்கின்றதென்பதூஉம் இதனால் நன்கு விளங்குகின்றனவல்லவோ? இனித், தம்தலைவன் கருத்துக்குமாறாக நடக்கும் மடமைக்கும் ஒன்றெடுத்துக்காட்டுதும். சிறந்த நிலையிலமர்ந்து வேலைபார்க்கும் அறிஞர் ஒருவர் ஒருகால் தமக்கொரு சமையற்காரனைப் புதிது அமைத்தார். அவர் ஒருநாள் விரைந்து வெளியே போகல்வேண்டினமையின் [illegible]ரைந்து உணவமைக்கும்படி அவற்குக் கட்டளையிட்டார். [illegible]றிப்பிட்ட நேரத்தில் அவர் அடுக்களையிற்போந்து தமக்[illegible]ணவமைக்கும்படி கேட்க, அச்சமையற்காரன் சோற்றை[illegible]டும் வேகவைத்துக்கொண்டிருந்தான்; குழம்பு கறிகள் ஏதும் இன்னும் அமைத்திலன். இவையெல்லாம் அமைப்பதற்கு மூன்றுமணி நேரங்கள் முன்னமே அவர் தெரிவித்திருந்தும், அவன் அறிவின்மையினாலோ அல்லது ஒழுங்காகச் செய்யமாட்டாமையினாலோ, சோற்றை முக்கால் வேக்காடாக அவித்ததற்குமேல் வேறேதுஞ் செய்திலன். அத்தலைவர் காலந்தாழ்த்தல் ஆகாமையின் [illegible]யிற் கொணர்ந்து படைக்கவென அவனை ஏவினர்.

அவன் முக்கால் வேக்காட்டிலுள்ள சோற்றை மட்டுங் கொணர்ந்துபடைத்து, 'இன்னுஞ்சிறிது நேரத்திற் குழம்புகறிகள் ஆய்விடும்' என நுவன்றனன். அவர் அவ்வாளின் மடமைக்கு உள்ளே மிகவருந்தி, 'நல்லது சோற்றில் விட்டுக்கொள்ளுதற்கு என்ன வாங்கி வைத்திருக்கின்றாய்?' எனவினவ அவன் 'நெய்யுந்தயிரும் வாங்கி வைத்திருக்கின்றேன்' எனக் கூறி உட்சென்று ஒரு தயிர்க்கிண்ணத்தை எடுத்துவந்தனன். 'முதலிற் சிறிது நெய்யைவிடு' என அவர்கேட்ப, அவன் தான் கொணர்ந்த கிண்ணத்தைக் கவிழ்த்துப்பார்க்கத் தயிர் கீழே சிந்திப்போனதையும் அவன் உணராமல் 'ஐய, நெய்யுந்தயிரும் வாங்க இரண்டு கிண்ணம் ஏதுக்கு என்று இந்த ஒரேகிண்ணத்தின் அடிப்பக்கத்துள்ள வட்டிலில் நெய்யும் மேற்பக்கத்துள்ள வட்டிலில் தயிரும் வாங்கிவைத்தேன். கீழேயுள்ள வட்டிலில் நெய்யைக் காணோம், மேலேயுள்ள தயிரையாவது விட்டுக் கொள்ளுங்கள்' என்று சொல்லி அக்கிண்ணத்தை மேலே திருப்பினான். கீழ்த்திருப்பியபோதே கொட்டிப்போன தயிரைநோக்காமல் அவன் செய்ததைப்பார்த்து, அவனது மடமைக்காக அவ்வறிஞர் சிரிக்க, அவன் அவர் தனது சமையற்றொழிலின் திறமையைக்கண்டு மகிழ்கின்றாரென நினைந்து, 'பெருமானே, எனக்குச் சம்பளஞ் சிறிது கூடக்கொடுத்தருளல்வேண்டும்!' என அவரைப் பணிந்துகேட்டனன். இங்ஙனந், தலைவன் கருத்துக்கு மாறாக நடக்கும் மடமைமிக்க ஏவலர் உளராயின், அவரையுடைய தலைவற்கு வசதியும் மனக்கிளர்ச்சியும் உண்டாகுமோ என்பதை நினைந்துபார்மின்கள்! அவரால் தலைவர்க்கு ஓயாக்கவலையுந் துன்பமுமே உளவாகுமாதலால், அவர் நீண்டநாள் நன்கு உயிர்வாழ்தல் இயலாது. மற்றுத், தந்தலைவன் குறிப்பறிந்து அவன் எல்லாவகையிலும் உவக்கும்படி ஏவற்றொழில் புரியவல்லாரே, அவற்குக் கவலையில்லா உள்ளக்களிப்பினையும், அதன்வாயிலாக நீண்டவாழ்நாளினையும் அவற்கு விளைக்கமாட்டுவாராவர். இந்நுட்பமறிந்துரைத்த பிசிராந்தையாரது புலமை எத்துணை நுண்ணிதாய்த் திகழ்கின்றது! இங்ஙனமெடுத்துக்காட்டிய இருகாரணங்களும் ஒருவன் நீண்டநாட் கவலையின்றி வாழ்தற்கு இசைந்த அகக்

காரணங்களாகும்; அதாவது: ஒருவனது இல்லத்தே உளவாய காரணங்கள்.

இனி, ஒருவன் கவலையில்லா நீண்டவாழ்க்கையில் வாழ்தற்கு, அவன்றன் இல்லின்புறத்தே உளவாதற்குரிய காரணங்களிரண்டைப் புலவர்பிரான் பிசிராந்தையார் நுவன்றதூஉம் ஒருசிறிது ஆராயற்பாற்று. ஆசிரியர் குடியிருந்துவாழும் ஊர்க்கு அரசனாய் இருந்தவன் தனது அரசியன்முறையிற் சிறிதேதும் புகாமற் செங்கோல்செலுத்திக் குடிபுறந்தந்தமையே தாம் கவலையின்றி முதுமைதெரியாமல் உயிர்வாழ்ந்ததற்கு ஏதுவாயிற்றென்கின்றார். அரசன் கொடியனாய்க் குடிமக்களை வருத்தி இறைப்பணம் வாங்குபவனாயிருந்தாலும், முறைவேண்டினார்க்குங் குறைவேண்டினார்க்கும் நடுநின்று அரசு செலுத்தாமல் நெறிவழீஇ ஒழுகுபவனாயிருந்தாலுங், குடிமக்கள் இனிது வாழ்தற்கு இன்றியமையாது வேண்டிய நற்செயல்களைப் புரியானாய்க் குடி சூது காமம் முதலிய தீச்செயல்களிலேயே முழுகினவனாயிருந்தாலும் அவனது நாட்டின்கீழ் வாழ்வார்க்குத் துன்பமே நோயே வறுமையே வாழ்நாட்குறைவேயல்லால் வேறு நன்மை சிறிதும் உளதாகாது. இதுபற்றியே,

"கொடுங்கோன் மன்னன் வாழும் நாட்டிற்
கடும்புலிவாழுங் காடுநன்றே" என்றும்,
"குடிகொன் றிறைகொள்ளுங் கோமகற்குக் கற்று
மடிகொன்று பால்கொளலும் மாண்பே" என்றும்,
"இன்று கொளற்பால நாளை கொளப் பொறான்,
நின்று குறையிரப்ப நேர்படான்-சென்றொருவன்
ஆவன கூறின் எயிறலைப்பான் ஆறலைக்கும்
வேடலன் வேந்தும் அலன்" என்றும்,
"கெடுவல் யான் என்பதறிக தன்னெஞ்சம்
நடுவொரீஇ அல்லசெயின்" என்றும் அறநூல்கள் கூறுவ

வாயின. ஆனால், பிசிராந்தையார் காலத்திருந்த அரசனோ அரசியன்முறையிற் சிறிதும் பிறழாதவனாய்த் தீநெறிச் செல்லாதவனாய் எப்போதுங் குடிமக்கட்கு நன்மையே செய்பவனாயிருந்தமையின், அவனது செங்கோல் நீழற்கீழ் வைகி உயிர் வாழ்ந்த ஆசிரியர்க்கு எவ்வகைக் கவலையுந்துன்பமும் நோயும் இலவாயின; அதனால் அவர் ஆண்டில் முதியராயிருந்தே உருவில் இளைஞராய்க் காணப்படலாயினர்.

இனி, மேற்கூறிய புறக்காரணமேயன்றி, ஆசிரியர் பிசிராந்தையார் தாம் வாழ்ந்தநாட்டிற், கல்வி கேள்விகளும் நற்குணங்களும் ஒருங்கமைந்து உயர்ந்தோர்க்குப் பணிந்து ஐம்புல அவாக்கள் அடங்கப்பெற்ற சான்றோர்கள் பலர் உளராதலாகிய பிறிதொரு காரணமும் எடுத்துக்காட்டுகின்றார். இப்பெற்றியரான சான்றோர் குழுவிற் சேர்ந்து, பொய்யா நாவினரான அவர்கூறும் ஆழ்ந்தகன்ற மெய்யுரைகளைக் கேட்டலானும், அவர்க்குள்ள இயற்கை நற்குணங்களொடு பழகுதலானும், அவரை அங்ஙனஞ்சேர்ந்தார்க்கு உயர்ந்த அறிவும் விழுமிய இயல்பும் அவாவின்மையும் ஒருதலையாக உண்டாதல் திண்ணம். மேலும், அவர் கூறுவனவற்றின் சொற்சுவை பொருட்சுவைகளில் உள்ளம் ஊறி இன்பத்திற் றிளைத்தலால் அவருடைய உயிரும் உடம்பும் இன்பவொளியால் ஊடுருவப் பெற்று ஒளிரும். அதனால் அவர் காலத்தைமறந்து, சிற்றின்ப வேட்கையற்று என்றும் இளைஞராயே திகழுவர். இது குறித்தன்றோ **தெய்வத்திருவள்ளுவர்,**

"நல்லினத்தி னூங்குந் துணையில்லை தீயினத்தின்
அல்லற் படுப்பதூஉம்இல்" என்றும்,
"மனநல நன்குடையராயினுஞ் சான்றோர்க்
கினநலம் ஏமாப்புடைத்து" என்றும்,
"நிலத்தியல்பால் நீர்திரிந்தற்றாகும் மாந்தர்க்
கினத்தியல்ப தாகும் அறிவு" என்றும் அருளிச்செய்த

னர். இக்கருத்துப்பற்றியே **நாலடியாரில்,**

"தவலருந் தொல்கேள்வித் தன்மையுடையார்
இகலிலர் எஃகுடையார் தம்மிற் குழீஇ
நகலின் இனிதாயிற் காண்பாம் அகல்வானத்
தும்பர் உறைவார் பதி" என்னும் அரியசெய்யுளும் எழுந்தது. பார்மின்! இற்றைக்கு இரண்டாயிர ஆண்டுகட்கு முன்னரே, நல்லிசைப்புலமை மிக்க ஆசிரியர் பிசிராந்தையார் நீண்டகாலம் நரை திரை மூப்பின்றி வாழ்தற்குரிய அகக்கார

ணங்களிரண்டும் புறக்காரணங்களிரண்டும் எத்துணை நுட்பமாக எடுத்தருளிச் செய்திருக்கின்றார்!

ஆசிரியர் பிசிராந்தையார் பாடிய இச்செய்யுளினாலும், இவர்காலத்திருந்த ஏனை நல்லிசைப்புலவர்களும், நல்லிசைப் புலமை நிரம்பிய அரசர்கள் அரசியர்களும், முத்தமிழ்ப்புலமைமிக்க மாதர்களும் அருளிச்செய்த அருந்தமிழ்ப் பாடல்களினாலும், அஞ்ஞான்றிருந்த தமிழ்மக்களின் இல்லறவொழுக்கங் காதலன்பிற் பிணிப்புண்ட கணவரும் மனைவியரும் ஒருங்குகூடி நடாத்த நடைபெற்றவரலாறும்; அத்துணைச் சிறந்த அன்பின் சேர்க்கையிற் றோன்றிய புதல்வர்களுந் தம் பெற்றோர்களைப்போல் அன்புக்கும் அருளுக்கும் அறத்திற்கும் உறையுளாய்த் திகழ்ந்தவரலாறும்; அஞ்ஞான்றை அரசர்களெல்லாருந் தாங் கல்வியிற் றலைசிறந்து விளங்கித் தங்கீழ்வாழுங்குடிகளும் அதிற் புலமைமிக்குப் பொலியச் செங்கோலோச்சி வந்தமையால் இருபாலாருந் தீதின்றி நல்வழியிற் செல்லுதலையே கடைப்பிடியாய்க்கொண்டு வாழ்ந்த வரலாறும்; இவ்வாறு எல்லாருங் கல்வியறிவிலும் மேம்படு குணங்களிலும் நாளுக்குநாட் பிறைமதிபோல் வளர்ந்து வாழ்ந்துவந்தமையால், அவருட் பொருள்வளமின்றி வறுமையால் வாடிப் பிறர்க்கு ஊழியஞ் செய்யப் புக்காரும் அவையிரண்டிலுங் குன்றுதலின்றித் தந் தலைவர்தங் கருத்தறிந்து ஒழுகிப் பயன்பட்டவரலாறும்; அந்நாட்களிற் கல்வி யறிவு ஆராய்ச்சித் துறைகளின் ஆழங்கண்டு மனநலங்களெல்லாம் ஒருங்கே பொருந்தப்பெற்ற சான்றோர்குழாந் தலைநகரங்களிலும் அவற்றைச் சூழ்ந்த ஊர்களிலுந் தொகை தொகையா யிருந்த வரலாறுந் தெற்றென விளங்குதல் கண்டுகொள்க.

புலவர்தம் பரந்த தூய துறவுள்ளம்

இனிப், பழையநாட் புலவர்களும், அவர்தம் ஆணைவழி நின்று தமது வாழ்க்கையை நன்கினிதுநடாத்திய தமிழ்மக்களும் ஒரேயொரு முழுமுதற்கடவுளாகிய முக்கணனைத் தொழுது, தாமெல்லாரும் அம்முதற்பெருங் கடவுளாகிய ஒரேயொரு தந்தைக்கு உரிமைப்புதல்வர்களாம் உண்மைகண்டு, தமக்குள்ஏதும் வேற்றுமை இலராய் இம்மையிலேயே பேரின்ப

வாழ்க்கையில் வாழ்ந்துவந்தனர். பண்டைத்தமிழாசிரியருந் தமிழ்மக்களும், ஒரே முழுமுதற்கடவுள் உலகமேயுருவாய் ஞாயிறு திங்கள் தீ என்னும் மூன்றொளிகளையும் மூன்று திருக்கண்களாக்கொண்டு, எல்லாவுயிர்க்கும் புறக்கண் அகக்கண்களைவிளக்கி, அவர்தம் மெதிரேநின்று பேரருள்வழங்கும் பான்மையினைத் தெளியக்கண்டு அவனொருவனையே **முக்கண**னென்னும் பெயரால் வணங்கி வழுத்தினமை,

"பணியியரத்தை நின்குடையே முனிவர்
முக்கட்செல்வர் நகர்வலஞ்செயற்கே" (புறம், ௬) என்

னும் மிகப்பழைய திருப்பாட்டில் அதனாசிரியர் **காரிகிழார்** 'பாண்டியன்முதுகுடுமிப் பெருவழுதி'க்கு அறிவுரைதெருட்டு மாற்றானும்; ஆரியராற் போற்றப்பட்ட 'இந்திரன்,' 'வருணன்,' 'அக்நி,' 'மாதரிஸ்வான்,' 'பிரமன்,' 'விஷ்ணு' முதலியோரெல்லாம் உண்மையிற் கடவுளரல்லராய்ப் பிறந்திறக்கும் ஆருயிர்வகையிற் சேர்ந்தவராகலின் அவரெல்லாந் தம்மை யொத்த மாற்றாராற் றமக்குவரும் ஏதங்கள் களையமாட்டாராய் இளைத்துவருந்தி எல்லாம்வல்ல இறைவனான முக்கணனை வேண்டிக் குறையிரப்ப, இறைவனே அவர்தம் அல்லல்களைக் களைந்து அவர்க் கருள்செய்தமை,

"ஓங்குமலைப் பெருவிற் பாம்புநாண் கொளீஇ
ஒருகணை கொண்டு மூவெயில் உடற்றிப்
பெருவிறல் அமரர்க்கு வென்றிதந்த
கறைமிடற்றண்ணல்" (புறம், ௫௫) என்னும் பழைய

பாட்டில் **மதுரை மருதனிளநாகனார்** குறிப்பிடுமாற்றானும், அங்ஙனமே **கலித்தொகை** என்னும் பழந்தமிழ்ப் பெருநூலும்,

"தொடங்கற்கட் டோன்றிய முதியவன் முதலாக
அடங்காதார் மிடல்சாய அமரர்வந் திரத்தலின்
மடங்கல்போற் சினைஇ மாயஞ்செய் அவுணரைக்
கடந்தடு முன்பொடு **முக்கண்ணான்** மூவெயிலும்
உடன்றக்கான் முகம்போல ஒண்கதிர் தெறுதலிற்
சீறருங் கணிச்சியோன் சினவலின் அவ்வெயில்
ஏறுபெற் றுதிர்வன" (பாலைக்கலி, க) என்று மொழிந்திடு

தலானும், பின்னர்க் காலங்கடோறும் வடவாரியர் செந்தமிழ் நாடுபுகுந்து குடியேற அவர் வணங்கிய தெய்வங்களும், இத் தமிழகத்தார் வணங்கிய வேறு சில தெய்வங்களும் இங்குள்ளாராற் றொழப்படலானபோதும், அவ்வெல்லாத் தெய்வங்களுக்கும் மேலாக முக்கட்பெருமானே முதல்வைத்து வழிபாடுசெய்யப்பட்டு வந்தமை,

"ஏற்றுவல னுயரிய எரிமருளவிர்சடை
மாற்றருங் கணிச்சி மணிமிடற் றோனும்,
கடல்வளர் புரிவளை புரையுமேனி
அடல் வெங் நாஞ்சிற் பனைக்கொடியோனும்,
மண்ணுறு திருமணி புரையு மேனி
விண்ணுயர் புட்கொடி விறல் வெய்யோனும்,
மணிமயில் உயரிய மாறுவென்றிப்
பிணிமுக வூர்தி ஒண்செய்யோனுமென
ஞாலங் காக்குங் கால முன்பிற்
றோலா நல்லிசை நால்வர்" (புறம், ௫௬) என மதுரைக் கணக்காயனார் மகனார் **நக்கீரனார்** அருளிச்செய்திருக்கு மாற்றானும் நன்கறிகின்றன மல்லமோ?

இனி, அம்முழுமுதற் கடவுளாகிய முக்கணனுக்கு மக்களெல்லாரும் உரிமைப் புதல்வர்களாகலின் அவர்களெல்லாரும் ஓரே குலத்தினராய் ஒருவரோடொருவர் வேற்றுமையேதுமின்றி அளவளாவி வாழ்தற்குரியரென்னும் உண்மையினையும் நம்பண்டைத் தமிழாசிரியர் கண்டறிந்தமை,

"யாதும் ஊரே, யாவருங் கேளிர்,
தீதும் நன்றும் பிறர்தர வாரா;
நோதலுந் தணிதலும் அவற்றோரன்ன;
சாதலும் புதுவ தன்றே; வாழ்தல்
இனிதென மகிழ்ந்தன்று மிலமே; முனிவின்
இன்னா தென்றலும் இலமே; மின்னொடு
வானந் தண்டுளி தலைஇ ஆனாது
கல்பொருதிரங்கும் மல்லற்பேர் யாற்று
நீர்வழிப் படூஉம் புணைபோல் ஆருயிர்
முறைவழிப் படூஉமென்பது, திறவோர்

வித்துக் கொண்டனர். அதனைச்செவியேற்ற ஆசிரியர் அச்செல்வரின் கசிந்த வேளாண்மை யுள்ளப்பெற்றியுணர்ந்து, தாமே அவ்வூர்சென்று, அவ்விளைபுலங்களை நோக்கி, அவை தம்மை இறைவன் திருவருள் நிலையமாக நினைந்து,

"வித்தும் இடல்வேண்டுங்கொல்லோ விருந்தோம்பி
மிச்சில் மிசைவான் புலம்" என்னுந்திருக்குறட் பாவினை மொழிந்தருளினார். ஆசிரியரது கடைக்கண் நோக்கம் பட்ட அப்பொழுதே அவ்விளைபுலங் கொழுமையுற்று இடையூறுதீர்ந்து பெருவிளைச்சல் விளைந்தன. அதனாற் பல்லுயிர்களும் பசிப்பிணி நீங்கி மகிழ்ந்தன.

ஆசிரியரது அருட்பெருந்தகைமையினையும் அவர் தம்பேராற்றலினையும்நேரேகண்டவழித்துணைவர்பெரியதொருவியப்பும் உவகையும் நிரம்பிய உள்ளத்தினராய் அவரைப்பணிந்து, "பெருமானே, அடியேற்கு நேர்ந்த இப்பெருங்குறையினை நீக்குவார்க்கு என்மகளை வாழ்க்கைப் படுத்துவேன் என்றோர் உறுதி செய்துளேன்" எனத்தாங்கொண்டகுறிக்கோளைத்தெரிவித்தார். அஃது உணர்ந்த ஆசிரியர் "நும்மகள் யாம் தரும் இவ் இருப்புக் கடலையினைச் செவ்வையாக அவைத்துத் தருகுவளாயின், யாம் அவளை மணஞ்செய்துகொள்ள ஒருப்படுவேம்" என மொழிந்தனர். இருப்புக் கடலை என்பன இரும்பினாற் செய்தவைகள் அல்ல; கடலையிலேயே எளிதில் வேகாத ஒருவகையே இருப்புக்கடலையென வழங்கப்பட்டுவருகின்றது. வழித்துணைவரும் அக்கடலையினைப் பெற்றுக்கொண்டு போய்ப் **பாப்பம்மையார்** (வாசுகி) என்னுந் தம் அருமைப்புதல்வியார் கையிற் கொடுத்து, நாயனாரது உள்ளக்கிடக்கையினை அறிவிப்ப, அந்நங்கையார் "அத்துணைப் பெரிய அறிவாளரே இவை அவைத்தற்கு இசையும் எனக்கருதி விடுத்தனராகலின், இவை அவர் குறித்தவாறே வெந்து பதமாகும்" என நினைந்து,

பிறிதுரையாது, அவைதம்மை வாங்கி மணமுஞ் சுவையும் பெருகச் சமைத்து, ஆசிரியர்க்குப் படைத்திட்டார். அது கண்ட நம் நாயனார் அவ்வருமை நங்கையாரை மணம்புரிந்தருளி, அவருடன் பூவும் மணமும்போற், பாலுந்தேனும்போற், பழமுஞ் சாறும்போல் ஒருங்கிருந்து இல்லறம் நடாத்திவரலானார். இவர் நடாத்திய இல்லறவாழ்க்கையின் மாட்சியினைப் பின்னே எடுத்துக் காட்டுவாம்.

பழம் பிறவி நினைவு

கடார (பர்மா) தேயத்துப் பௌத்தமத மக்களுடன் நெருங்கிப்பழகி, அவர்தங் கோட்பாடுகளையும் பழக்க வழக்கங்களையும் நன்காராய்ந்து அறிந்து ஒரு சிறந்தநூல் வரைந்த ஓர் ஆங்கில ஆசிரியர்,* ஒரு பௌத்த முனிவர் தமது முற்பிறவியின நினைவுகூர்ந்து நடந்த உண்மை நிகழ்ச்சியினையும், அதுபோன்ற வேறு சில உண்மை நிகழ்ச்சிகளையுந் தாம் எழுதிய அந்நூலின்கண் எடுத்துக் காட்டியிருக்கின்றார். அந்நிகழ்ச்சிகளை அவர் கூறுமாறே இங்கு மொழிபெயர்த்துரைக்கின்றாம்:—

"என் நண்பர் ஒருவர், ஒருசிறிய பட்டிக்காட்டுக்கு நெடுந்தொலைவில் ஒரு கானகத்தின்கண் உளதான ஒரு பௌத்தமடத்தில் ஓர் இராப்பொழுதிற்குத் தங்கவேண்டியவரானார். அவர், தமக்குக் காவலாகக் குதிரைமேல் வந்த பாடிகாவலருடன் தங்கவேண்டியிருந்தமையால், அம்மடத்தைத் தவிரத் துயில்கொள்வதற்கு வேறிடங் கிடைக்கவில்லை. அம்மடத்திற் குரியவரான பௌத்த முனிவர், அவர்களை நல்விருந்தாக ஏற்றுத், தம்மிடம் இருந்த உணப்பொருள்களை அவர்களெதிரே வைத்து,

* H. Fielding Hall; see his book "The Soul of a People," pp. 291-307.

வெறிதாயிருந்த ஓர் அறையினையும் அவர்கட்கென்று ஒழித்துக்கொடுத்தார். அதனால் அவருடன் வந்தவர்களும் அன்றிரவு அங்கே தங்கியிருக்கலாயினர்.

இராச்சாப்பாடு முடிந்ததுங், குளிர்காய்வதற்கு ஒரு கணப்புச்சட்டி கொணர்ந்து நிலத்தே வைத்துத் தீ மூட்டப்பட்டது. உடனே அந்நண்பர் அதனருகே சென்று அமர்ந்து, அவ்வூர்த் தலைமைக்காரனிடத்தும் அம்முனிவரிடத்தும் உரையாடத்துவங்கினர். முதலில் அவர்கள், கருத்தைக் கவருஞ்செய்திகளான கொள்ளைக்காரர் செயல்களையும் பயிர் விளைச்சல்களையும் பற்றிப் பேசினர். அதன்பிற் படிப்படியே ஒன்பின்னொன்றாய் வேறு பலவற்றைப் பேசிக்கொண்டே சென்றனர். முடிவில் அவ்வாங்கிலமகன், அம்மடத்தின் அமைப்பைக் குறிப்பாய்ப்பார்த்து, அஃது, அத்தனிமையான சிற்றூரைநோக்க, மிகப்பெரிய தொன்றாயும் அழகியதாயும் அமைக்கப்பட்டிருத்தலை வியந்துபேசினர். அம்மடமானது, மிகச்சிறந்த, வளைவில்லாமல் நிமிர்ந்த தேக்கமரங்களாற் கட்டப்பட்டிருத்தலால், அதனைக் கட்டி முடிப்பதற்கு நீண்டகாலமும் மிகுந்த உழைப்பும் பிடித்திருக்குமென்றும் அவர் எண்ணினார். ஏனென்றால், அத்தகைய தேக்கமரங்கள் அவ்விடத்திற்கு அருகே எங்குமில்லை. அதனால், அவை மிக எட்டியுள்ள இடங்களிலிருந்து கொணர்ந்து சேர்ப்பிக்கப்பட்டனவா யிருக்கவேண்டுமென அவர் புகன்றனர். அதுகேட்ட அவ்விருவரில் தலைமைக்காரன் அம்மடத்தின் வரலாற்றை எடுத்துரைக்கலானான்.

பழைய நாட்களிற் காடுசூழ்ந்த குறிச்சிகளில் அமைக்கப்பட்ட மடங்கள் மூங்கில்களாற் கட்டப்பட்டு மேலே விழல்வேய்ந்து செய்யப்பட்டனவாகும். முன்னொருகால் அத்தன்மையதாகவே இவ்விடத்தில் இயற்றப்பட்டிருந்த மடம் மிகச்சிறிய தொன்றாயுந், தாழ்

வைத்துநடத்தும் பள்ளிக்கூடத்திற்கு ஏற்ற வசதிவாயாததாயும் இருந்தமைகண்டு, அந்நாளில் அதன்கண் இருந்த ஒருதுறவி மனம்புழுங்கி, வலியதாக ஒருபெரிய மடங் கட்டி முடித்தலைக்கருதி, அதற்காக ஒரு மழைகாலத்தில் தேக்கநாற்றுகளை வருவித்து அவற்றை அம்மடத்தைச்சூழ நடுவித்தார். பிறகு அவைதமக்குத் தண்ணீர் பாய்ச்சி, அவைகளைக் கருத்தாய் வளர்த்துவந்தனர். அங்ஙனம் அவைகளை வளர்த்துவரும் நாட்களில், ''இவை பெரியனவாய் வளர்ந்தபிறகு, தகுதியான ஒரு புதிய கட்டிடம் வகுப்பதற்கு இவை பெரிய தேக்க மரங்களாய்ப் பயன்படும். யானே மறுப்பிறப்பிற் பிறந்து வந்து, அம்மரங்களைக்கொண்டு இதனைவிடத் தகுதி வாய்ந்ததொரு திருமடத்தினை இங்கு அமைப்பிப்பேன்'' என்று அவர் அடிக்கடி சொல்லிக்கொண் டிருப்பது வழக்கம். தேக்கமரங்கள் பேரளவினவாய் வளர்ந்து முற்றுதற்கு நூற்றாண்டுகள் செல்கின்றன. மற்று, அத்துறவியோ, தாம் நடுவித்த தேக்கநாற்றுகள் இளங்கன்றுகளாயிருக்கும்போதே, இறந்துபோயினர். மற்றொரு பௌத்ததுறவி அம்மடத்திற்குத் தலைவராய் வந்தமர்ந்து, அதன்கண் நடைபெற்ற கலைபயில் கழகத்தை நடத்திவரலானார். இவ்வாறாகக் காலம் போய்க்கொண்டிருந்தது; ஆண்டுகள் செல்லச்செல்லப் புதிய புதிய மடங்கள் மூங்கில்களினாலேயே திரும்பத்திரும்ப அமைக்கப்பட்டுவந்தன; அங்கே நடப்பட்ட தேக்கமரங்களும் வரவரப் பெருத்துவளர்ந்தன. ஆனால், அச்சிற்றூரோ பின்னும் பின்னுஞ் சிறிதாய்க் குறுகியது; ஏனென்றாற், காலஞ் செல்லச்செல்லத் தொல்லையும் மிகுதிப்பட்டது; அவ்வூருங் காட்டினுள்ளே எட்டியிருந்தது. கடைப்படியாக அவ்வூருக்கே ஒருதுறவி இல்லாமற்போயினர். இறுதியாக இருந்த துறவியும் இறந்தபிறகு, வேறொருவரும் அவ்விடத்திற்கு வந்துசேரவில்லை

ஓர் ஊருக்கு ஒருதுறவிகூட இல்லாதொழிவது பெரியதொரு குறைபாடாகும். அங்குள்ள இளஞ்சிறார் எழுதப் படிக்கக் கணக்குச்செய்யக் கற்பிப்பார் எவரும் இல்லை. ஐயம் இட்டு அதனாற் பெரும்பேற்றை எய்துதற்கும் அங்கு ஐயம் ஏற்பார் எவரும்இல்லை. உயிர்க்குறுதியான புனிதஉரைகளை எடுத்து அறிவுறுத்துதற்கும் பெரியாரெவரும் அங்கில்லையாயினர்! ஆகவே, அவ்வூரின் நிலைமை பழுதான தொன்றாய்த் திரிபுற்றது.

பிறகு சிறிதுகாலங் கழித்து ஒருநாட் சாயங்காலத்தில், அவ்வூர்ச் சிறுமிகள் அங்குள்ளதொரு கிணற்றில் நீர் முகந்துகொண்டிருக்கையில், அவ்வடவியினுள்ளிருந்து ஒருதுறவி நெடுவழிவந்தமையால் அடிகள் புண்பட்டுக் களைத்துப் பசியுடன் அங்கு வந்துசேர்ந்தனர். உடனே அவ்வூரவர் அவரை மிகுகளிப்புடன் வரவேற்றனராயினும், அவர் அவ்வழியே வேறோர் ஊர்க்குச் செல்பவராயிருக்கலாமென மனம் வெதும்பி, அவர் அன்றிரவு தங்கித் துயில்கொள்ளுதற் பொருட்டு அப் பழைய மடத்தைப் பரபரப்புடன் துடைத்துத் துப்புரவு செய்தனர். ஆனாற், புதுமை என்னென்றால், வந்த அத் துறவி அவ்விடமெல்லாம் அறிந்து பழக்கப்பட்டவர் போற் காணப்பட்டார். அவர், அம்மடத்தையும் அதற்குச் செல்லும்வழியையும், அடுத்துள்ள ஊர்க்குச் செல்லும் பாதைகளையும், அங்குள்ள குன்றுகள், ஆண்டு ஓடும் நீரோட்டங்களின் பெயர்களையும் நன்கறிந்தவராயிருந்தனர். அதனால், அவர் முன்னொருகால் அவ்வூரில் உறைந்தவராயிருக்க வேண்டுமென்பது அவ்வூரினர் எல்லார் உள்ளத்திலும் பட்டது. என்றாலும், அங்குள்ளாரெவரும் அவரை அறிந்தவராயும் இல்லை, அவரது முகம் அறியப்பட்ட தொன்றாயு மில்லை. அவர் ஆண்டில் இளைஞராயும், அவ்வூரவரிற் சிலர் எழுபதாண்டு உயிர்வாழ்ந்தவராயும் இருந்தனர்.

மறுநாட்காலையில், அத்துறவி அவ்விடத்தைவிட்டு வழிச்செல்பவராயில்லாமல், ஐயம் ஏற்குங் கடிஞை ஏந்தி, அவ்வூர்க்குட்புகுந்து, பௌத்த துறவிகள் ஐயம் ஏற்கும் முறைப்படியே, தெருக்கடோறுஞ் சுற்றிவந்து, அன்றைக்குவேண்டும் உணவைத் தொகுத்துக்கொண்டார். அன்றை மாலைப்பொழுதில், அவ்வூரினரெல்லாரும் அவரை அம்மடத்திற் காணவந்தபோது, அவர் தாம் அங்கேயே பதிவா யிருக்கப்போவதைச் சொல்லிப், பிறகு, அம்மடத்தைச்சூழ அத்தேக்கமரங்களை அங்கே நடுவித்த துறவியைப்பற்றியும், அம்மரங்கள் வளர்ந்து முற்றியபின் அத்துறவி திரும்பிவருவதாகக்கூறிய உறுதியுரையைப்பற்றியும் அவர்கட்கு நினைவுறுத்தினர். அதன்பின் அவ்விளந் துறவியார் அவர்களைநோக்கி, "யானே இம்மரங்களை இங்கு நடுவித்தவன். இதோ! இவை வளர்ந்துவிட்டன; யானுந் திரும்பிவந்துவிட்டேன்; யான் முன் மொழிந்ததுபோலவே இப்போது ஒரு திருமடத்தைக் கட்டுவாமாக!" எனவிளம்பினர்.

அவ்வூரவர் அவர்கூறியதில் ஐயுற்றுப் பற்பல கேள்விகளைக்கேட்டனர்; ஆண்டில் முதிர்ந்தோர் நெடுங்காலத்திற்குமுன் வழங்கிய செய்திகளைப்பற்றி அவர்பால் உரையாடினர்; அவைகளையெல்லாம் அவர் அறிந்தவர்போல் அவர்கட்கு விடைகொடுத்தனர். இன்னுந், தாம் தெற்கே நெடுந்தொலைவிற் பிறந்து கல்வி பயிற்றப்பட்டதையுந், தாம் இன்னாரென்றே அறியாமல் வளர்ந்ததையும், பிறகு தாம் ஒரு திருமடத்திற்சேர்ந்து 'பொங்கி'* ஆனதையும்; பிறகு ஒருநாள் தாம் கனவுகாண்கையில், தாம் தேக்கமரங்கள் நடுவித்ததும் அக்கானகத்திற் சேயதாயுள்ள அச்சிற்றூருக்குத்திரும்பிவருவதாகக்கூறிய உறுதிமொழியுந் தம் நினைவுக்குவந்ததையும் எடுத்துரைத்தார்.

* பௌத்தமதத்திற் சேர்ந்த துறவிகளானவர் 'பொங்கி' என்று கடாரதேயத்தில் வழங்கப்படுகின்றனர்.

அங்ஙனங் கனவுகண்ட மறுநாளே தாம் இருந்த இடத்தைவிட்டுப் புறப்பட்டுப் பலநாட்களும் பலகிழமைகளுமாகத் தாம் அவ்வூர்க்கு அவர்கள் கண்ணெதிரே வந்துசேர்ந்ததுந் தெரிவித்தார். வியக்கத்தக்க அவ்வரலாற்றைக்கேட்ட அவ்வூரினர் அவர் கூறிய அதில் நம்பிக்கையுற்று, அப் பருத்த தேக்கமரங்களை வெட்டி வீழ்த்தி, இப்போது காணப்படும் அப்பெரிய திருமடத்தைக் கட்டி முடித்தனரென்பது."

"இன்னும், இளஞ்சிறார் பலர் தம் முற்பிறவிநிகழ்ச்சிகளை நினைவுகூர்ந் துரைக்கின்றனரெனவும், அவர்கள் வளரவளர அந்நினைவு மறைந்துபோதலின் அவர்களவற்றையும் மறந்துபோகின்றனரெனவும், ஆனால், அவர்கள் சிறுவராயிருக்கும் வரையில் அந்நினைவு அவர்கள்பாற் றெளிவாகவே விளங்குகின்றதெனவும் பர்மியர் கூறுகின்றனர். யானே அத்தகைய நினைவுவாய்ந்த பிள்ளைகளைப் பார்த்திருக்கின்றேன். ஐம்பது ஆண்டுகளுக்குமுன் 'ஒக்ஷித்கான்' என்னும் ஒரு சிற்றூரில், ஓர் ஆண்மகவும் ஒரு பெண்மகவும், பக்கத்துப் பக்கத்து வீட்டில் ஒரேநாளிற் பிறந்தன. அவை யொன்றாய் வளர்ந்து, ஒன்றாய் விளையாடி, ஒன்றையொன்று காதலித்தன. பிறகு பருவமுதிர்ந்து இளைஞரான பின், அவ்விளைஞனும் இளையமாதும் மணஞ்செய்துகொண்டு, அவ்வூரையடுத்துள்ள வறண்ட பாழ்நிலங்களைத் திருத்திப் பயிர்செய்து, அவற்றிற்கிடைத்த விளைவால் தமது இல்லற வாழ்க்கையை இனிது நடாத்திவரலாயினர். அவர்கள் ஒருவரையொருவர் பிரிந்து உயிர்வாழ மாட்டாத அத்துணைப்பெருங் காதற்கிழமை யுடையராயிருந்தன ரென்பதும், அதனால் அவர்கள் வாழ்நாள்முடிந்து உயிர்துறந்த காலத்தும் ஒன்றாகவே உயிர்துறந்தனரென்பதும் அங்குள்ளாரெல்லாரும் நன்கறிந்தனவாகும். அவர்களிருவரும் ஒரேநாளில் இறந்தமையால், ஊர்க்குப் புறத்தேயுள்ள இடுகாட்டில்

அவர்களைப்புதைந்து விட்டார்கள். அவர்களைப் பற்றிய நினைவுங் காலஞ் செல்லச் செல்ல அவ்வூரார்க்கு இல்லாமல் மறைந்துபோயிற்று. ஏனென்றால், காலத்தின் வல்லமை பெரிதன்றோ?

இனி, யான் கூறப்போகும் நிகழ்ச்சியானது, ஆங்கிலரதுபடை 'மாந்தலே' நகரத்தைக் கைப்பற்றிக்கொண்டதற்குப்பின் அடுத்த ஆண்டில் நிகழ்ந்ததாகும். அப்போது கடாரதேயமுழுதும் பெருஞ்சீற்றத்துடன் கலகம் விளைத்துநின்றது. அந்நாட்டவர்களெல்லாரும் படைக்கலந்தாங்கிநின்றனர்; பாட்டைகளிற்செல்வது அச்சத்திற் கிடமாயிருந்தது; இராக்காலமோ ஊர்கள் நெருப்புப் பற்றியெரியுந் திகிலான வெளிச்ச முடையதாய்த் தோன்றியது. அமைதியாய்க் காலங்கழிப்பவர்க்கு அது பொல்லாதகாலமாய் மாறியது. அமைதியாய் உயிர் வாழ்ந்த மாந்தர் பலர் பட்டிக்காடுகளில் இருப்பதை விட்டு, அரசியல் நடைபெறும் நகரங்களையடுத்த பெரிய ஊர்களிற்போய் அடைக்கலம் புகுந்தனர்.

இவ்வாறு துன்புற்ற நாடுகளின் இடையே 'ஒக்ஷித்கான்' என்னும் ஊரும் இருந்தது. அதனால், அதன்கட் குடியிருந்த மக்கள் பலரும் அவ்விடத்தைவிட்டு ஓடிப்போயினர். அவர்களுள் ஒருவனாகிய 'மாங்கான்' என்பவன் தன்மனைவியுடன் 'கப்யு' என்னும் ஒரு சிற்றூரிற் சென்று அங்கே தங்கினன். அந்த 'மாங்கா'னின் மனைவி அவற்கு இரண்டு ஆண்குழந்தைகளை இரட்டைப் பிள்ளைகளாய்ப் பெற்றனள். அப்பிள்ளைகள் ஒன்றாக வளர்ந்து விரைவில் தமது மொழியிற் பேசக் கற்றுக் கொண்டார்கள். அங்ஙனம் அவர்கள் பேசக் கற்றுக் கொண்டபின் விளையாடும் நேரங்களில், அச்சிறார் தம்முள் ஒருவரையொருவர் அழைக்கும் போதெல்லாந், தம்பெற்றோர் தமக்கிட்ட பெயர்களால் தம்மை அழைத்துக்கொள்ளாமல், 'மாங்சன்நயீன்' எனவும் 'மாகையின்'

எனவுந் தம்மை அழைத்துக் கொள்ளுதல்கேட்டு, அவர் தம்பெற்றோர் பெரிதும் இறும்பூதுற்றனர். ஏனென்றால், இரண்டாவது பெயர் ஒரு பெண்மகளின் பெயராகும். மேலும், முதற்பெயரும் இரண்டாவதுபெயரும் பூண்டிருந்த அவ்வாடவனும் மனைவியும் 'ஒக்ஷித்கான்' ஊரிற் காதலன்பிற் சிறந்தவராய் வாழ்ந்து இறந்தபின்னர்த்தான், இம்மகார் இருவரும் இவர்தமக்குப் பிள்ளைகளாய்ப் பிறந்தனர்.

''ஆகவே, இதனை ஆராய்ந்து பார்க்கும்பொருட்டு இப்பெற்றோர் இப்பிள்ளைகளை அழைத்துக்கொண்டு 'ஒக்ஷித்கான்' ஊர்க்கே போயினர். அங்கே சென்றபின் அச்சிறுவரிருவரும், அவ்வூரிலுள்ள வழிகளையும், வீடுகளையும், அவ்வீட்டிலுள்ளாரையும், அவ்விருவருந் தமது முற்பிறவியில் வழக்கமாய் அணிந்திருந்த ஆடைகளையும் நன்றாகத் தெரிந்து கொண்டனர். அதைப்பற்றிச் சிறிதும் ஐயமேயில்லை. அவ்விளைஞர் இருவரில் இளவலாயிருந்தவன், தான் முற்பிறவியிற் பெண்மகளாயிருந்ததுந், தான் தன் கணவனுக்குத் தெரியாமல் 'மாதெட்' என்னும் ஒரு மாதினிடம் ஒருகால் இரண்டுரூபா கடன் வாங்கியிருந்ததும், அக்கடனைச் செலுத்தாமலே தான் அப்போது இறந்துபோயதும் எல்லாம் நன்கு நினைவு கூர்ந்துரைத்தான். 'மாதெட்' என்னும் அம்மாதர் இன்னும் உயிரோடிருந்தமையாற், பெற்றோர்கள் அக்கடனைப்பற்றி அவளை வினவினர்; அவளும் அதனை நினைவு கூர்ந்து நீண்டநாளுக்குமுன் தான் அங்ஙனங் கடன் கொடுத்தது உண்மையேயென ஒப்புக்கொண்டாள்.

''சிறிது காலத்திற்குப்பின்னர் யான் இச்சிறுவர்இருவரையும் பார்த்தேன். இப்போது இவர்கட்கு அகவை ஆறாண்டுக்குமேற் சிறிது கூடஇருக்கும். மூத்தபையன் குள்ளமாய்த் தடித்துக் கொழுமையாய் இருந்தனன்; இளையபையனோ இன்னுங்குள்ளமாய்ச் சிறிது இடுகிய

210480

கண்ணினனாய் ஒரு பெண்பிள்ளையைப்போல் இருந்தனன். அவரிருவருந் தங்கள் பழம் பிறவிகளின் நிகழ்ச்சிகளை எனக்கு மிகுதியாய் எடுத்துரைத்தனர். தாம் முன்னை இறந்தபிறகு தமக்கோர் உடம்பேயில்லாமற் சிறிதுகாலம் இடைவெளியில் அலைந்துகொண்டிருந்ததாகவும் மரங்களில் ஒளிந்துகொண்டிருந்ததாகவும் எனக்குச் சொன்னார்கள். இவ்வாறு அலையலானது அவர் தாஞ்செய்த தீவினைப்பயனாகும். பின்னர்ச் சிலதிங்கள் கடந்து, மறுபடியும் அவர்கள் இரட்டைப்பிள்ளைகளாய்ப் பிறந்தார்கள். ‘முன்னே என் நினைவு மிகத்தெளிவாயிருந்தமையால் யான் ஒவ்வொன்றையும் நினைவுகூரக் கூடியவனாயிருந்தேன் ; ஆனால், இப்போது அது வரவர மழுங்கிப் போகின்றது ; முன்போல இப்போது யான் அவைகளை நினைவுகூரக் கூடவில்லை’ என்று அம்மூத்தபையன் என்னிடம் மொழிந்தனன்.’’

‘‘இன்னும், என்னுடன் அலுவல்பார்க்கும் ஒரு துரைமகனார்க்கு ஒரு பார்மிய பாடிகாவலன் ஏவலனாய் இருக்கின்றனன். இவன் இருபஃதாண்டுள்ள ஓர் இளைஞன். இரண்டாண்டுகளுக்கு முன் அத்துரைமகனார் அவ்வட்டத்திற்கு வந்ததுமுதல் அவன் அவரிடம் வேலை பார்த்துவருகின்றான். என் நண்பர் தம் ஏவலன் தனது முற்பிறவி நிகழ்ச்சிகளை நினைவுகூர்ந்திருத்தலை முன்னொருநாள் தற்செயலாய்க் கண்டுபிடித்தார். ஆனாலும், அவன் அதைப்பற்றிப் பேசுவதில் மிகவும் வெறுப்புக்கொண்டிருந்தான். இப்போது தானிருக்கும் இடத்திற்கு இருபதுகல் தொலைவிலுள்ள ஓர் ஊரில் அவன் முற்பிறவியில் ஒரு பெண்மகளாய்ப் பிறந்திருந்தனன். அவன் அப்பிறவியில் நன்னடக்கை யுடையனாயிருந்தமையின், இப்பிறவியில் ஓர் ஆண்மகனாய்ப் பிறந்தனன்; ஏனென்றால், ஆண்பிறவியெடுப்பது கீழ்நிலையிலிருந்த ஓர் உயிர் மேல்நிலைக்கு ஏறுவதாகும்; என்றாலும், அவன்

அதைப்பற்றிப் பேசவில்லை. அவன் தான் சிறுபிள்ளையாயிருந்தஞான்று தனது முற்பிறவியின் நிகழ்ச்சிகளைத் தான் நன்கு நினைவுகூர்ந்திருந்தாலும், இப்போதவைகளைத் தான் பெரும்பாலும் மறந்துவிடுவதாகவே எமக்குக் கூறினன்.’’

‘‘இன்னுஞ், சிறிதுகாலத்திற்கு முன், ஏழாண்டு அகவையினளான ஒரு சிறுபெண்ணைப் பார்த்தேன். அவள் தன் முற்பிறவியில் தான் ஓர் ஆண் மகனாய்ப் பிறந்திருந்த வரலாறுகளை யெல்லாம் எடுத்துரைத்தாள். அப்போதிவள் தான் பூண்டிருந்த பெயர் ‘மாங்மன்’ என்றும், ஊர் ஊராய்ச்செல்லும் பாவைக்கூத்திற் சேர்ந்து தான் பாவைகளை ஆட்டிவருவதுண்டென்றுங் கூறினள். இவடன் பெற்றோர்கள், இவள் சிறுகுழந்தையாயிருக்கையிலேயே இவளுக்குப் பாவைகளிடத்திலும் அவைகளை ஆட்டுவதிலும் மிகுந்த விருப்பம் இருத்தல் கண்டு, இவள் முற்பிறவியிலேயே இத்தகையதொரு தொழிலை மேற்கொண்டவளாகத்தான் இருக்கவேண்டுமெனத் தாம் எண்ணியதாக எனக்கு எடுத்துரைத்தனர். இவள் பால் பருகும் மகவாயிருக்கும்போதே பாவைகளைக் கயிறு பூட்டி ஆட்டத் தெரிந்தவளாயிருந்தாள். இவள் நான்காண்டு வளர்ந்த பிறகுதான் இவடன் முற்பிறவி நிகழ்ச்சி இவட்குத் திட்டமாய்த் தெரியலாயிற்று. ஒரு பரண்பாவைக் கடையினையும் அதன்கணிருந்த பாவைகளையும் இவள் தான் பார்த்தபோது, அவை முற்பிறவியில் தனக்குரியவாய் இருந்ததனைத் தெரிந்துகொண்டாள். இவள் அப்பாவை ஒவ்வொன்றன் பெயரையும், அவையிற்றை ஆட்டுங்கால் தான் பேசுஞ் சொற்கள் சிலவற்றையுங்கூடச் செவ்வனே நினைவு கூர்ந்தாள். மேலும் அவள் எனக்குச் சொன்னவை இவை: ‘யான் முற்பிறவியில் நான்குமுறை மணஞ் செய்துகொண்டேன். என்மனைவிமார் நால்வருள் இருவர் இறந்து

போயினர். மூன்றும் மனைவியை விலக்கி விட்டேன். நான்காம் மனைவி யான் இறக்குங்கால் உயிரோடிருந்தனள்; இப்போதும் உயிரோடிருக்கின்றனள்; இவளை யான் மிகவுங் காதலித்தேன். யான் விலக்கிவிட்ட மூன்றும் மனைவியோ மிகவுங்கொடியவள்; இதோ பாருங்கள்! (என்று தன் தோளின் மீதிருந்த ஒரு தழும்பைக் காட்டி) எங்கட்குள் நேர்ந்த சண்டையில் அவள் எனக்குத் தந்தது இது! அவள் ஒரு கத்தியை யெடுத்து இவ்வாறு எனக்குக் காயத்தை உண்டாக்கினள்; அதன் பிறகுதான் யான் அவளை விலக்கிவிட்டேன். அவள் மிகக்கொடிய குணம் உள்ளவள்'

"இங்ஙனமாக இச்சிறுமி உரையாடியது எனக்குப் பெரிதும் புதுமையாய்த் தோன்றியது. இவள் காட்டிய இத்தழும்பு பிறவியிலேயே அமைந்த அடையாளமாகும். என்றாலும், அச்சண்டையில் அவன் மனையாள் உண்டாக்கின காயம் பட்ட அதே இடத்திலேயே இச்சிறுமி காட்டிய வடு அமைந்த உண்மை எனக்கு அங்குள்ளாரால் உறுதிப்படுத்தப்பட்டது.

"நீக்கப்பட்ட மனைவியுங், காதலிக்கப்பட்ட மனைவியும் இன்னும் உயிரோடிருக்கின்றனர்; அவர்கள் ஆண்டில் இன்னும் முதிரவில்லை. காதலிக்கப்பட்ட நான்காம் மனைவியானவள், இச்சிறு பெண்ணைத் தன்னுடன் வந்திருக்கும்படி விரும்பினள். ஆனால், அவள் அதற்கிசைந்து அவள்பாற் செல்லவில்லை. அதன்மேல் யான் அச்சிறுமியை நோக்கி 'நீ அந்த அம்மையை நிரம்பவுங் காதலித்தா யென்பது உனக்கே தெரியும். அந்த அம்மையும் உனக்கு நல்ல மனையாளாய் இருந்தவர். அவ்வாறாயின், நீ அவருடன் இருந்து வாழவிரும்ப வேண்டுமே' என வினவினேன். அதற்கு அச்சிறுமி, 'அவை எல்லாம் முற்பிறவியில் நடந்தவை' என்றனள். இப்போது அச்சிறுமி தன் பெற்றோரிடத்திலேயே அன்பு மிக்கவளா

யிருக்கின்றாள். சென்ற பிறவியின் நினைவு அவட்கொரு கனவாய்த் தோன்றியது. அதுவுந் தொடர்பு பட்டுத் தோன்றாமல், துண்டு துண்டாய் இன்னுந் தோன்றுவதாயிற்று. ஆனால், முற்பிறவியிற் காணப்பட்ட பகைமையும் அன்பும் மனக்கொதிப்பும் உழப்பு மெல்லாம் அடியோடு அவிந்துபோயின."

"இன்னும் ஒரு சிறுபையன் தனக்குத் தன் முற்பிறவி நிகழ்ச்சி நினைவுக்கு வந்தவரலாற்றினைப் பின்வருமாறு எனக்கெடுத்துக்கூறினன். பௌத்த மடங்களில் திருவிழாக்கொண்டாடுங் காலங்களில், ஒருதுறவி யிருக்கும் இடத்திற்கும் மற்றொருதுறவி யிருக்கும் இடத்திற்கும் இடையிடையே திரைகளிடுவது வழக்கம். அங்ஙனம் இடப்படுந் திரைகளிற் சில, இப்பையன் முற்பிறவியில் அணிந்திருந்த பட்டுத்துணிகளைக் கொண்டு தைக்கப்பட்டிருந்தன. இனி, ஒரு செல்வன்றன் மகனான ஒரு சிறுவன் பௌத்தமதத்தின் துறவியாகச் செய்யப்படுந் திருநாள் ஒன்று ஒரு திருமடத்திற் கொண்டாடப்பட்டது. மேற்கூறிய பையன் றன் பெற்றோர்கள் தம் பையன் மூன்றாண்டுள்ள சிறுவனாயிருக்கும்போது, அவனை அழைத்துக்கொண்டு அத்திருநாளுக்குச் சென்றனர். அவன் அது நடைபெறுந் திருமடத்திற்குச் சென்றதும், அங்கே தொங்கவிடப்பட்டிருக்குந் திரைகள் சில தான் முற்பிறவியில் அணிந்திருந்த பட்டுத்துணிகளைக்கொண்டு செய்யப்பட்டிருத்தலைக் கண்டனன்; கண்டவுடனே, அவனுக்குத் தனது முற்பிறவியின் நிகழ்ச்சி நினைவுக்கு வந்துவிட்டது. அவனும் அதனைக் குறிப்பிட்டுக் காட்டினன்.

"இச்சிறுவன் தான் முன்னே இறந்துபட்டதும், மூன்று திங்கள்வரையில் மற்றொரு பிறவிக்கு வாராமல் தான் துன்புற்றதும் எனக்கு எடுத்துரைத்தான். இஃது எதனால் நேர்ந்ததென்றால், அவன் தற்செயலாக ஒரு

கோழியைக் கொன்றதனால் நேர்ந்ததாகும். அவன் வேண்டுமென்றே அதனைக் கொன்றிருந்தனனாயின், இன்னுங் கடுமையாக அவன் ஒறுக்கப்பட்டிருப்பனாம். இந்த மூன்று திங்களிற் பெரும்பாலும் அவன் ஒரு தேங்காய்ச் சிரட்டைக் குடைவிலேயே யிருந்தமையாலும், அச் சிரட்டை மாட்டுக்காரப் பயல்கள் மாடோட்டிச்செல்லும் ஒரு வழியண்டையிற் கிடந்ததனால் அப்பயல்கள் விடியற்காலையில் மாடுகளை யோட்டிச்செல்லுங்கால் தமது கையிலுள்ள கோலால் அச்சிரட்டையை அடித்துக் கொண்டே சென்றமையாலும் அதனுள்ளிருந்த தனக்குப் பெருந்துன்பமுண்டாயிற்றென்று அதனை எனக்கு விளக்கிச்சொன்னான் என்பது.”

மாமரம்

மா என்னுஞ் சிறந்த மரம், சூடுமிகுந்த இத்தமிழ்நாட்டிலும் இதனையடுத்துள்ள சில நாடுகளிலும், இதற்குக் கிழக்கேயுள்ள கடாரம், மலேயா, சாவகம் முதலான வெவ்விய தேயங்களிலும் மிகுதியாய் வளர்கின்றன. குளிர்மிகுந்த நீலமலை, இமயமலை முதலிய விலங்கல்கள் மேலும், பனிப்பெய்யும் ஐரோப்பிய மேல்நாடுகளிலும் இவை பயிராவதில்லை.

‘மாந்தி,’ ‘கொக்கு,’ மாழை,’ ‘நாளினி,’ ‘எகினம்’ முதலிய சொற்கள் மாமரத்தைக் குறிப்பனவான பழைய தமிழ்ச்சொற்களாகும். இவற்றுள், நாளினி, மாழை, எகினம் என்பன புளிமாவினைச் சுட்டுமென்று பிங்கலந்தை நிகண்டு கூறுகின்றது. ‘சூதம்,’ ‘ஆமிரம்,’ ‘சிஞ்சம்,’ முதலியன மாமரத்தினை யுணர்த்தும் வடசொற்களாகும்.

பழைகாலந்தொட்டு வளர்ந்தோங்கி நிற்கும் மாமரங்களில் ஒருசாரன தேமாவென்றும், மற்றொருசாரன புளிமாவென்றும் பகுத்து வழங்கப்பட்டு வருகின்றன.

ஏனென்றாற், காய்முற்றிப் பழுத்தபின் இனியசுவை தரும் ஒருவகை தேமாவெனப்பட்டது; பழுத்த பின்னும் புளிப்பாயிருத்தல்பற்றி மற்றொருவகை புளிமாவெனப்பட்டது. பழைய மாங்கனிகளில் நார் இல்லாதவைகளைக் காண்டல் அரிது.

ஆனால், இந்நாளிலோ, பழைய மாமரத்தின் சிறு கிளைகளில் வேறு மாஞ்செடிகளின் கிளைகளைக் கொணர்ந்து சீவிப் பிணைத்துக்கட்டி எடுத்த ஒட்டுமாஞ்செடிகளை எங்கும் மிகுதியாய்ப் பயிராக்குகின்றார்கள். இவை மூன்று நான்கு ஆண்டுகளிலெல்லாங் காய்த்து நாரில்லாத இனிய பழங்களைத் தருகின்றன. கொட்டை மாங்கனிகளைவிட ஒட்டுமாங்கனிகள் அளவிற் பெரியனவாய்த் தீஞ்சுவையில் மிகுந்தனவாய் இருக்கின்றன. கொட்டை மாங்கனிகள் பெரும்பாலனவற்றில் நாரும் புளிப்பும் இருத்தலால் அவற்றைச் சிறுக உண்டாலும் அவை உடம்பின் நலத்தைப் பழுதுபடுத்துகின்றன. ஒட்டுமாங்கனிகளிலோ நாரும் புளிப்பும் இல்லாமல் உள்ளுள்ள தசை சுளை சுளையாக இருத்தலாலுந், தித்திப்பான சாறு நிரம்பியிருத்தலாலும் அவையிற்றைச் சிறிது மிகுதியாக உட்கொண்டாலும் உடம்பின் நலம் பழுதுறாது; அளவாயுண்டால் உடம்பின்நலம் பெருகும். என்றாலும், ஒட்டுமாங்கனிகளிற் சில புளிப்பாயிருத்தல் ஏன் என்றாற், கடைக்காரர்கள் மரங்களில் நன்றாய் முற்றுதற்கு முன்னமே அவைதம்மைப் பறித்து விற்பனை செய்யக்கொணர்கின்றனர். அதனால் அவை யங்ஙனம் புளிப்பாயிருக்கின்றன. மரங்களில் நன்றாக முற்றும்மட்டும் விட்டுவைத்துப், பின்னர் பறித்துப் பழுக்கவைத்த ஒட்டுமாம் பழங்கள் ஆராத் தீஞ்சுவை பயப்பனவாயிருத்தலை எமது தோட்டத்திலுள்ள ஒட்டுமாமரங்களில் வைத்தே நன்கறிந்திருக்கின்றேம். ஆனால், மரங்களில் அவை செவ்வனே முற்றும்மட்டும் அவையிற்றை விட்டு

வைப்பதற்குச் சில இடையூறுகள் இருக்கின்றன. பகற்காலத்தில் அணிற்பிள்ளைகளும், இராக்காலத்தில் பழந்தின்னி வௌவால்களும் பகலிராக்காலங்களிற் சிறுவர்கள் கள்வர்களும் புகுந்து அவையிற்றைக் கடித்துத் தின்றுங் கவர்ந்துகொண்டும் போய்விடுதலால், அவை முதிர்ந்து செங்காய் ஆகுதற்கு முன்னமே தோட்டக்காரர்கள் அவையிற்றைப் பறித்துவிடுகின்றார்கள்.

ஒட்டுமாமரங்களில் 'நடுச்சாலை' என்னும் வகை மிகுந்த மணமும் நிறைந்தசுவையும் உடையன. 'மல்கோவா' என்னும் வகை அத்துணை மணம் இல்லாவிடினும், இன்சுவையில் மிக்கனவாய், அளவிலும் ஒரு தேங்காய்ப்பருமன் பெருக்கின்றன. 'கிளிமூக்கு' என்னும் வகையில் மணம் மிகக்குறைவு; சுவையில் மூன்றாந்திறமே. 'நீலம்' என்னும் வகையிற்சேர்ந்த ஒட்டுமாம் பழங்கள் நன்றாய் முற்றியபின்னும் பச்சென்ற தோலுடையவாய்க் காணப்படுகின்றன; ஆனாலும், உள்ளுள்ள தசை சிவந்த மஞ்சள்நிறம் வாய்ந்து தேனூறித் தித்திக்கின்றன. இந்நான்குவகைகளைத் தவிர, இன்னும் எத்தனையோ வகையான ஒட்டுமாமரங்கள் உள்ளன. இங்ஙனமே கொட்டை மாமரங்களிலும் பற்பல வகைகள் உண்டு.

இனி, இஞ்ஞான்று இத்தென்னாட்டிற் பலவிடங்களிற் பருத்தடர்ந்து காணப்படும் மாந்தோப்புகளில் உள்ள பெரிய பெரிய மரங்களெல்லாங் கொட்டைகளிலிருந்து உண்டானவைகளே யாகும். இக்கொட்டை மாமரங்களில் ஐந்நூறாண்டு ஆயிர ஆண்டுகளுக்குமேல் உயிருடன் நிற்கும் மரங்களும் உண்டு. இம்மரங்களின் அடிகள் மேலுள்ள பட்டைகள் பொரிந்த இயற்கையுடையனவாய் இருத்தலால் இவைதம்மைப் 'பொரியரைமா' என்று பழைய தமிழ்நூற்செய்யுட்கள் அடுத்தடுத்து வழங்காநிற்கும். இம்மாமரங்கள் பெரும்பாலும் பட்டிக்காடுகளுக்குப் பக்கத்தே ஒரு தொகுப்பாக வைத்துப்

மேன்மேல் இன்பத்தைத் தருதற்கேற்ற தகுதியினராய்த் துலங்குமாறு செய்ய வேண்டிய முறைகளில், உயிர்வாழ்க்கையின் பொருட்டு உலகில்நேரும் பெரும் போராட்டத்திற்கு ஈடுகொடுக்குமாறு மாணாக்கர்களை முன்னமே பழக்கும் முறைகளிற் பல்கலைக்கழகத்திற்குரிய இச்சிறந்த நோக்கமானது, சென்னைப் பல்கலைக்கழகத்தின்பாற் காணப்படவில்லை. முதன்மையாய்த் தமிழ்க் கல்வியை ஊட்டுந்துறையிற் பார்ப்பனர்கள் தலைமைபெற்றிருந்தவரையில் இக்கழகத்தின் நோக்கம் ஈடேறவில்லையென்பது, இக்கழகத்தில் தொடர்புடையாரெவரும் நன்கறிந்ததேயாம். என்றாலும், பார்ப்பனரல்லாதாரிற் பலர் ஆங்கில மொழியினைப்பயின்று, பார்ப்பனரால் நேர்ந்ததடைகளை விலக்கி, மேனிலைக்கு வந்தபின், தம்மவரும் அவர் வழங்கும் மொழியும் எவ்வளவு கீழ்நிலையிற்றள்ளி வைக்கப்பட்டிருக்கின்றனவென்பதை யுணர்ந்து, அரசியற்றுறைகள் பலவற்றையுந் தந்நலம் பாராட்டுவார் தலைமையினின்றும் மாற்றிப் புதுக்கித் திரும்பவும் ஒழுங்குபடுத்திவருகின்றனர். அதனாற்றான், தமிழ்ப்பாடநூற்கழகமும் ஒழுங்கானமுறையிற் புதுக்கப்பட்டு, எல்லாவகையிலுந் தேர்ச்சிபெற்ற ஒரு தமிழறிஞரையுந் தலைவராகப் பெறுவதாயிற்று. இங்ஙனம் இஃது ஒழுங்கு படுத்தப்படாவிட்டால் எம்முடைய தமிழ்நூல்களில் ஒன்றிரண்டுகூடச் சென்னைப் பல்கலைக்கழகமாணவர் கையிற் சேர்ந்திரா.

சென்ற நாற்பதாண்டுகளில் யாம் நாற்பது தமிழ்நூல்களுஞ் சில ஆங்கில நூல்களும் இயற்றிவெளியிட்டிருக்கின்றேம். இவைகள், தமிழ்நூல் வரலாறும், முப்பொருளியல்புங், கடவுளுண்மையும், பாட்டியல் வழக்கும் பிறவும் விரித்து விளக்குவனவாகும். இவைகள் பெரும்பாடுபட்டெழுதி நூறாயிர வெள்ளிக்குமேற் செலவுசெய்து வெளியிடப்பட்டனவாகும். ஆயினும், இவை சென்னைப் பல்கலைக்கழக மாணவரெல்லாருடைய பார்வைக்கும் எட்டாமலே வழங்கிவருகின்றன. ஏனென்றாற், சாதிமதங்களைப்பற்றிய எம்முடைய சீர்திருத்தக்கொள்கைகளும், இப்போது தமிழ்நூல்களில் நூற்றுக்கு 50 விழுக்காடு புகுத்தப்படும் வடசொற்களை அறவேகளைந்து தனித்தமிழிலேயே தமிழ்நூல்கள் எழுதப்படவேண்டுமென்னும் எமது விடாப்பிடியான கொள்கையுந், தமிழர் ஆரியர் நாகரிகங்களை யாம் ஒப்பிட்டு அளந்து ஆராய்ந்துரைக்கும் உண்மையுரைகளும், பார்ப்பன ஊழியர்க்கும், அவருதவியை வேண்டியோ அல்லது தந்நலங்கருதிக் கோழைநெஞ்சமோடு அவர்க்கு அஞ்சியோ நடக்கும் பார்ப்பனரல்லாதார் சிலர்க்கும் எட்டிக்கொட்டையைப்போற் கசப்பாயிருக்கின்றன. பொதுமக்களைத்திருத்தி அவர்க்கு அறிவுவிளக்கத்தைத் தருதலாகிய ஒருநல்லெண்ணம் எவரிடத்தேனுங் காணப்படுமாயின் அதனைக்கூடப் பார்ப்பனர் பொறுக்கமாட்டார். ஏனென்றாற், சீர்திருத்தமும் அறிவுவிளக்கமும் உண்டாகுங்காற் பார்ப்பனர்தஞ் சூழ்ச்சியும் ஏமாற்றமும் இறந்தொழிதல் திண்ணம். ஆரியமதத்தைத்தழுவி ஆரியக்கிரியைகளையும் ஆரியப்பெருமையையும் உயர்த்தெடுத்து நாட்டுதலிற் பேரவாக்கொண்டுள்ள பார்ப்பனர்கள், ஆரியரல்லாத மக்களின் விரிந்தநோக்கத்தையுந் தந்நலமில்லாச் செயல்களையுங்கண்டு மனம்பொறாதவர்களாயிருக்கின்றார்கள். இவ்வுண்மையினை "வேதகாலத்து இந்தியா" என்னும் நூலில் அதன் ஆசிரியரான இராகோசின் என்னும் மேனாட்டாசிரியர் நன்கெடுத்துக் காட்டியிருக்கின்றார் (Vedic India, p. 320). இங்ஙனம் பன்னூறாயிரமக்களையும் நல்லறிவுபெறவொட்டாது தடைகள் பல விளைத்துக்கொண்டே, அவர்களிடைத் தாம் தனித்தொரு குழுவாயிருந்து, மதம் என்னும் பெயரால் பல வழிகளில் அவர்களுடைய வளம் எல்லாம் உரிஞ்சிவரும் பார்ப்பனர், தாம் நீண்டகாலமாகச் செய்துபோந்த தடையைமீறி, எமது "அறிவுரைகொத்துப்" பல்கலைக்கழக மாணவர்க்குப் பாடமாகவந்ததுகண்டு வயிறெரியாமலிருப்பரோ?

ஆயினும், உண்மையான் நோக்குவார்க்கு, எமது "அறிவுரைக்கொத்துப்" பார்ப்பனர்க்கேனும், பார்ப்பனரல்லாதார்க்கேனுந் தீதுசெய்யும் எத்தகைய பொருளும் உடையதன்றென்பது நன்குவிளங்கும். அல்லதொரு பார்ப்பனர் குறைகூறியபடி, அஃது ஆங்கிலஅரசைப் புகழ்ந்து, குடிமக்களை இகழ்தற்பொருட்டு எழுதிய நூலும் அன்று. (தொடரும்)

சைவசித்தாந்த ஞானபோதம் ௩-ஆம் பதிப்பு முதற்பாகம்

THE SAIVA SIDDHANTA, ITS RELIGION & PHILOSOPHY

சைவசித்தாந்தம் என்னும் அரிய பெரிய சைவசமய ஆராய்ச்சி முடிபுகளைத் தனிச்செந்தமிழ் உரை நடையில் மிக விரிவாக ஆராய்ந்து விளக்குஞ் சிறந்தநூல். சைவசித்தாந்த உண்மைகளை உள்ளவாறு உணர்தல் எளிதன்று. இலக்கண இலக்கியநூல்கள் அளவை (தருக்க) நூல்கள் பற்பல சமயநூல்கள் எல்லாம் நன்கு ஓதித்தெளிந்து, 'சிவஞானபோதம்' 'சிவஞான சித்தியார்' முதலான மெய்ந்நூல்களைப் பலகாலும் ஆராய்ந்தறிந்த பின்னரே சைவசித்தாந்த உண்மை விளங்குவதாகும். இவ்வளவுங் கற்றுத்தெளிபவர் இத்தமிழ்நாட்டகத்து அரியராயிருத்தலினாலேதான், சைவசித்தாந்தம் இதில் எங்கும் பரவவில்லை. இக்குறையை நீக்குவதற்காகவே இதன் ஆசிரியரான மறைமலை அடிகள் சென்ற நாற்பதாண்டுகளாக இத்தமிழ்நாடெங்கும் நிகழ்த்திய சைவசித்தாந்த விரிவுரைகளை இந்நூலில் தொகுத்தெழுதி வெளியிடலானார்கள். அடிகளின் விரிவுரைகளைக் கேட்டவர்களுங் கேளாதவர்களுஞ் சைவசித்தாந்த வுண்மைகளை இன்னும் விளக்கமாகத் தெரிந்து தம் உள்ளத்தில் ஆணித்திறமாகப் பதித்துப் பெறற்கரும் பயனைப் பெறுதற்கு இந்நூலினுஞ் சிறந்த கருவி வேறு இல்லை. கடவுள் நம்பிக்கை யில்லாதவரும் இந்நூலைப்பயில்வராயின் அந்நம்பிக்கை வாய்பெற்றுப் பெருநலம் எய்துதல் திண்ணம். இதன் பொருள் அடக்கம்:-சைவசமயமாட்சி, இந்துசமய உண்மைகள், சமரச சன்மார்க்கம், கடவுளுக்கு அருளுருவம் உண்டு, சிவகாருணியம், இருசைவ விளக்கங்கள், திருவுருவவழிபாடு, சிவலிங்க உண்மை, அம்பலவாணர் திருக்கூத்தின் உண்மை. 320-பக்கம், கலிக்காக் கட்டிடம், விலை மூன்று ரூபா.

திருவள்ளுவர் திருநாட்கழக முதல்விழா

திருவள்ளுவர் திருநாட்கழக முதல்விழாப் பேரவை 18-5-1935 இல் சென்னைப் பச்சையப்பன் கல்லூரி மேன்மண்டபத்திற் கூடியது. அம்மண்டபத்தில் எள்விழுதற் கிடம்இல்லை யென்னும்படி மாதர் ஆடவர் கூட்டம் நிறைந்திருந்தது. அப்பேரவைக்குத் தலைவராய் அமரும்படி ஆசிரியர் மறைமலையடிகள் பெருஞ்சிறப்புடன் அழைக்கப்பட்டுக், கழகத்தலைவர் திரு. கா. நமச்சிவாய முதலியாரவர்களின் வேண்டுகோண்மேல் தலைவர் இருக்கையில் அமர்ந்தனர். மாணவர்மன்றச்சிறார் கடவுள்வழிபாடு பாடியபின், நமச்சிவாய முதலியாரவர்கள் அடிகள் மும்மொழியினும் வல்ல பேராசிரியராய்த் தென்னாட்டிற் புலமையிற் றமக்கு நிகரில்லாதவராய் விளங்குதலை வியந்தெடுத்துப்பேசித், திருவள்ளுவரையும் திருவள்ளுவர் அருளிச்செய்த திருக்குறளையும்பற்றிப் பேசத்தக்கார் அடிகளேயென மொழிந்தமர்ந்தனர்.

அதன்பின் திருவாளர் திரு. வி. கல்யாணசுந்தர முதலியாரவர்கள் எழுந்து முன்மொழிந்தவருரையைத் தாங்கிப்பேசியதுடன், இத்தமிழ்நாட்டுக்கும் இதிலுள்ள மக்களுக்குஞ் சீர்திருத்தமான முறையில் அரியதொண்டாற்ற முன்வந்து அதனை முதலிற்செய்து வழிகாட்டியவர்கள் அடிகளேயென்றுந், தமிழ்நூல்களை வெளியிட்ட சிறப்புப் பிறர் சிலர்க்கு உரியதேனும் அந்நூல்களின் அரியபெரிய நுட்பங்களையுஞ் சுவைகளையும் இனிய செந்தமிழ் உரைநடையில் எழுதியும் பேசியுங்காட்டிப் பல்லாயிரந்தமிழ்மக்கள் தமிழைப்பயின்று இன்புறுமாறுசெய்த தனிப்பெருஞ்சிறப்பு அடிகட்கே உரியதென்றும் பேசியமர்ந்தனர்.

அதன்பின் திருவாளர் T. P. மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள், எம். ஏ., பி. எல்,. எழுந்து, முன்மொழிந்தாருரையைப் பின்பற்றிப் பேசியதுடன், அடிகளின் தனித்தமிழ்க் கொள்கையைப்பாராட்டி, வைணவசமய உரையாசிரியர்களுந் தனித்தமிழ் வழக்குக்கே முதன்மை கொடுத்திருக்கப் பிற்காலச் சைவர்கள் தனித்தமிழுக்கு மாறாயிருப்பது வருந்தத்தக்கதெனவுங் கூறியமர்ந்தார்கள்.

(தொடரும்)